அ.வ.எண்.**22/2023** பி.வா.சா.**1–** பாலசுப்பிரமணியன் **23.06.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

09.01.2023 அன்று வாதி உங்களுக்கு வா.சா.ஆ.2. அறிவிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 யை நான் அந்த அறிவிப்பை வாங்கியதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை என்றால் சரிதான். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை. வாதி மற்றும் சாட்சிகளான ஜெகநாதன், மதியழகன் ஆகியோர்களுக்கும், எனக்கும் எந்தவொரு முன்விரோதமும் இல்லை. தனிநபரிடம் வாங்கும் வட்டி குறைவாகவும், நிதி நிறுவனத்தில் இருந்து வாங்கினால் வட்டி அதிகமாக இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் இந்திரமூர்த்தியிடமும், வேறு யாரிடம் இருந்தும் கடன் பெறவில்லை. நான் கூட்டுறவு சொசைட்டியில் கடன் பெற்றுள்ளேன். 2003 ல் இருந்து வாதி நடத்தி வரும் நிறுவனம் அதிபதி பைனான்ஸ் கார்ப்பரேசன் மற்றும் அதிபதி இண்வெஸ்ட்மெண்ட் ஆகிய நிறுவனங்களில் எனக்கு வரவு, செலவு இருந்தது. நீங்கள் இது குறித்து உங்களது எதிர்வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2010 ஆம் ஆண்டே அதிபதி பைனான்ஸ் கார்ப்பரேசன் மற்றும் அதிபதி

இண்வெஸ்ட்மெண்ட் நிறுவனம் கலைக்கப்பட்டது என்று சொன்னால் நான் 2009 வரவு, செலவை முடித்துக் கொண்டேன், வாதி இதில் இல்லாமல் வேறு நிறுவனம் நடத்தி வருகிறார். வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதியிடமிருந்து ஆவணங்கள் திரும்பபெற நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் நான் பலமுறை வாதியிடம் நேரில் சென்று கேட்டுள்ளேன், அவ்வாறு கேட்கும்போது அலுவலகம் வேறு பக்கம் மாற்றிவிட்டேன், ஆகையால் ஆவணம் எடுக்க காலதாமதம் ஆகும் என்று கூறினார், வாதியின் சொந்த ஊரில், சொந்த வீட்டில் தொழில் பார்ப்பதாகவும் கூறினார். வரவு, செலவு முடித்த ஒரு ஆண்டில் 2010 ஆண்டு அவ்வாறு கூறினார். நான் காவல் நிலையத்தில் வாதி மீது எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு நீங்கள் எந்தவொரு பதிவு செய்யப்பட்ட ஆவணமும் மூன்றாம் நபர்களிடம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் இல்லை. 10.08.2020 ஆம் ஆண்டில் நான் 25 செண்ட் இடத்தை திருப்பி எழுதிக்கொடுத்த ஆவணம் ஆகும். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 10.08.2020 ஆம் ஆண்டு கொரோனா லாக்டவுன் இருந்த காலகட்டம் என்று சொன்னால் சரிதான். 2010 க்கு பிறகும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன், நான் வங்கியில் கடனும் பெற்றுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அது**

**வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 10.05.2020 அன்று வாதியிடமிருந்து ரூ.10,00,000/- கடனாக சாட்சிகள் முன்னிலையில் பெற்றுக்கொண்டு தற்போது பெறவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள நபர்கள் ஒரே இடத்தை சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல எங்களுக்கும், அவர்களுக்கும் 2, 3 கி.மீ., தொலைவு இருக்கும், சாட்சி, வாதி, நான் ஆகியோர்கள் ஒரே கிராமத்தை சார்ந்தவர்கள்தான். வாதியும், சாட்சியும் ஒரே நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஆவார்கள். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களைப்பற்றி உங்களது எதிருரையில் குறிப்பிடப்படவில்லை என்றும், எதிருரையின்போது தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை, தாக்கலும் செய்யவில்லை. நீங்கள் தாக்கல் செய்யாததற்கு காரணம் வழக்கிற்கு பின்னிட்டு மேற்சொன்ன ஆவணங்களை பொய்யாக வழக்கிற்கு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களில் தேதியோ, கடன் எண்ணோ, தொகையோ, நிதி நிறுவனத்தின் முத்திரையோ மற்றும் பங்குதாரர்களின் கையொப்பமோ குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூ.5000/- முதல் ரூ.50,000/- வரையிலான தொகையினை வாங்கியிருப்பேன். வாதி

தும்பிவாடி கிராமத்தில் பல ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் விவசாயம் செய்து வருகிறார், வாதி சொல்லும் காலகட்டத்தில் லாரியும் வைத்திருந்தேன். வாதியிடம் தனிப்பட்ட முறையில் வட்டி விகிதம் குறைவாக இருப்பதால் 10.05.2020 ஆம் தேதியன்று வாதியின் வீட்டிற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் ரூ.10,00,000/- கடன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால்தான் வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிதி நிறுவனம் இல்லாமல் தனிப்பட்ட நபர்களிடமும் பணம் பெறும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். 2010 ஆம் ஆண்டு வாதியின் நிறுவனம் கலைக்கப்பட்டது என்றும், நீங்கள் வாதியிடமிருந்து பணம் பெற்றதற்காக நீங்கள் வாதிக்கு பணம் செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் மூன்று பிராமசரி நோட் வாதியிடம் இருந்தது என்று காவல் நிலையத்தில் எதுவும் புகார் கொடுக்காத காரணம் அவ்வாறு எதுவும் இல்லை என்பதால்தான் என்று சொன்னால் சரியல்ல. எதிர்வழக்குரையில் கூறாத சங்கதிகளை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதால் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் தாவாவிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.

வாதி, என் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்பதற்காக அவர்மீது குற்றவியல் நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான், இனிமேல் எடுப்பேன்.

ஒம்/- K.H.இளவழகன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.